# இது உயர்வா இல்லை குறைவா? நீங்களே சொல்லுங்க மக்களே!

## தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!

| திராவிட மாடல் ஆட்சியில்! | த.வெ.க. ஆட்சியில்! |
| --- | --- |




ஏற்கனவே ரூ.8,000 ஆக உள்ள மீன்பிடி தடைக்கால நிவாரணத்தை, ரூ.7,000 ஆக அறிவிப்பது, உயர்வா இல்லை குறைவா?




### முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!



அரியலூர், ஆக. 7-

அரியலூர் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

இன்று ஆகஸ்ட் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் திராவிட இயக்கத்தின் நவீன சிற்பி, கழகத்தின் ஆணிவேர் தமிழ் சமுதாயத்தின் பாதுகாவலர் 13 முறை சட்டமன்ற உறுப்பினர் ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராகவும் பதவி வகித்தவர், பல பிரதமர்களையும் குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கிய உலகம் போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகர் நம் நெஞ்சோடு நிறைந்திருக்கும் அன்பு தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அதனைத் தொடர்ந்து அரியலூர் மாவட்டம் முழுவதும் உள்ள மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழகங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவருப் படத்திற்கும், திருவுருவச் சிலைக்கு மலர்தூவி, மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நிகழ்வுகளில் மாநில,மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தவறாது கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரியலூர் மாவட்ட கழக செயலாளர், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை முன்னாள் அமைச்சர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். சிவசங்கர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இன்று (ஆகஸ்டு 7) – தலைவர் கலைஞரின்

# 8-வது நினைவு நாளில் அனைவரும் புகழஞ்சலி செலுத்துவோம்!

### நீலகிரி மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



நீலகிரி, ஆக. 7-

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்திய அரசியலில் மூத்த தலைவராக இருந்து பல்வேறு சூழ்நிலைகளில் பல குடியரசு தலைவர்கள் மற்றும் பிரதமர்களையும் உறுவாக்கி, இந்திய அரசியலில் சமூக நீதியை காப்பதில் முதன்மையாக திகழ்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை 2021-2026 வரை முதல்வராக இருந்து திகழ வைத்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நமக்கு தந்தவர்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அவர்களின் 8-வது நினைவு நாளில் புகழஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், தளபதி அவர்களின் வழிகாட்டுதல் படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அய்யா அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்து மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.


அதன்படி, ஆகஸ்டு 7-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் அய்யா தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மரியாதையை செலுத்திட வேண்டுவதோடு, நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட வேண்டுகிறேன். இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஈரோடு வடக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துவோம்!

### மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை !



ஈரோடு, ஆக.7-


ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளையொட்டி வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம் பிரிவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. இந்த நினைவு நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அதனை தொடர்ந்து ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைக்கழகம், நகராட்சி, பேரூராட்சி, வார்டு கழகங்களில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துவோம். இந்த நினைவு நாள் நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் மற்றும் சம்மந்தப்பட்ட நிர்வாகிகள் நிகழ்ச்சியை நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அய்யா கலைஞரே உன் நினைவுகள் !



கூடு கட்டி வாழ்ந்தப் பறவைகள் கூடி
அழுகிறது
மரமே நீ சாய்ந்த நாள் !

மழைமேகம் கண்கலங்கிட ஆகாயமே
நீ புதைந்த நாள் !

ஒரு பக்கம்தலைவா எழுந்துவா
என்றமுழக்கம் !
ஒரு பக்கம் தலைவரே என்று
கதறிஅழுதிடும் சத்தம் !

உன் இறப்பிற்குப் பின்
போர்க்களம்நடக்கிறது
உன் உடலில்இருந்தே தோட்டாக்களை
எடுக்கிறது எங்கள்துப்பாக்கி !

தலைவர் ஸ்டாலினோ
உனக்கு
கல்லறைக் குழிக் கேட்ட
களத்தில்புதைத்து
காட்டினார், எதிரிகள் கணக்கைத்தப்பாக்கி !

உன் மீது வீசிய கல்
அதைச் சிற்பமாக வடித்தாய் !
உன்மீதுவீசிய சொல்
அதைக் கவிதைப் படித்தாய் !

உன் மீது வீசிய கத்தி புகழ்க் கண்டது !
உன் சிலை உடைத்த
கடப்பாரை கூட வரலாற்றில்நின்றது !

நீ கடைசியாக
அமர்ந்து எழுந்த
முரசொலி நாற்காலிக்கு !
முதலமைச்சர்
நாற்காலிக்கு
உன் நினைவுகள்!

நீ கடைசியாக அமர்ந்து எழுந்த
அறிவாலயம் நாற்காலிக்கு !
உன்னைத்தாங்கிய
சக்கரநாற்காலிக்கு
உன் நினைவுகள்!

நீ கடைசியாக தொட்ட
எழுதுகோலுக்கும் !
அண்ணா
என்றவரிகள் தாங்கியதாளுக்கும்
உன் நினைவுகள்!

நீ மத்திய சிறை
வாசலில் அமர்ந்தது !
அங்கே
அநீதி வீழும்
அறம் வெல்லும் என்று எழுதிய வரிகளுக்கு
உன் நினைவுகள்!

வெண் மயில் நிறத்தில்
தோளில் துண்டாடும் !
விரல் எழுதும் தமிழால் பகையோ
துண்டாகும் !

போராளிகள்
உருவாகிறார்கள்
உன் கடிதம் படித்தால் !

போர்க் களம் வெல்கிறார்கள்
நீ தரும் கொடியைப்
பிடித்தால் !

நீ மண மக்களை
வாழ்த்தியமேடை !
நீ போராட்டத் தேதி
அறிவித்த மேடை !

உன் கவியரங்கமேடை !
உன் கருத்தரங்கமேடை !
நீ
மு.கருணாநிதி எனும் நான் என்ற மேடை !
அனைத்திற்கும்
கண்ணீர் ஓடை !

அமிலம் கொடுத்தவருக்கும்
அமுதம் கொடுத்தவன் நீ !

வசந்தம் வசீகரிக்கும்
பேச்சின்பேரரசர் நீ !

தலை முடி நெளிநெளியாக
பிறகு வழுக்கையாக இருந்தபோதும்
நீ அழகு கூடம் !

தலைவா
திரைக் கூடம்
வணங்கிய நீ
கலைக் கூடம் !

உன் முரசொலி
இனத்திற்கு
பாடம் எடுக்கும்
பள்ளிக்கூடம் !

போராட்டமாக
பிறந்து
போராட்டமாக
இறந்த
போராட்டம் நீ

செங் களம்
பலமுறை வென்ற
வெண்கலம் நீ

கோபாலபுரத்தை
இதயம் பூசுகிறது
உன் உடல் பட்ட இடம் அல்லவா !

செருப்போடு நடக்க கால்கள் கூசுகிறது
அறிவாலயம்
உன் பாதம் பட்ட இடம் அல்லவா !

பத்திரமாக இருக்கிறது
பொங்கலுக்கு அது
உன் கைத்தொட்டு தந்த நோட்டு அல்லவா!

நீ எழுதிய
சங்க தமிழுக்கு
நினைவுகள் உன்
குறளோவியம் பற்றி !

தென்பாண்டி சிங்கத்திற்கு
நினைவுகள் உன்
பொன்னர் சங்கர் பற்றி !

பாயும் புலி பண்டாரகவன்னியனுக்கு
நினைவுகள்
உன்
ரோமாபுரி பாண்டியன் பற்றி !

வள்ளுவர்
கோட்டத்திற்கு
நினைவுகள் உன்
பூம்புகார் பற்றி !

குமரி வள்ளுவர் சிலைக்கு
நினைவுகள் உன்
கட்டபொம்மன் கோட்டையைப் பற்றி !

கணினி பூங்காவிற்கு நினைவுகள் உன்
அண்ணா நூற்றாண்டு நூலகம் பற்றி !

புகைவண்டி
தண்டவாளம்
தமிழ்ப் படித்தது
கல்லக்குடியில்
நீ தலை வைத்த போது !

தமிழ் அல்லவா இருந்தது என்றது
பாளைச் சிறை நீ தனிமையில் இருந்தபோது !

நெருப்பை குடித்துவிட்டு எரிமலையாகச்
சுழன்றவனே !
சூறாவளியைக் குடித்துவிட்டு புயலை
உமிழ்ந்தவனே !

மெல்ல மெல்ல
காவேரி மருத்துவமனையை
மதியம் போல காவல்துறை வளைத்தது !

மெல்ல மெல்ல
செய்திக் கசிய
உடன்பிறந்தவர்கள் கதறிக்கதறி அழுதது !

தலைவர்
முக.ஸ்டாலின் அவர்கள்
உன்உடலில்போர்த்த
அன்பகம் கலை
தைத்து எடுத்து வந்தக்
கொடியோடு
காத்திருத்தது !
அழுதது !

பத்திரமாக வீடு செல்லுங்கள் என உன்
குரலோடுமுடியும்
ஊர்வலம் !

நீ மட்டுமே வீடு திரும்பாமல் முடிந்தது உன்
இறுதி ஊர்வலம் !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி

